பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 26 வியாழக்கிழமை 10.03.2022 கதிர் 125

### இது ரகசியம் அல்ல!

'நெருப்பில்லாமல் புகையாது' என்பார்கள். தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி பரவும் விடயத்திலும் கூட நெருப்பு இருப்பதாகவே தெரிகின்றது.

வீண் பேச்சு, கற்பனை வாதம் என்றெல்லாம் இப்போது மறுக்கப்பட்டாலும் கூட

☞ 2

# ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகள் சிறையில் இருந்த பேரறிவாளனுக்குப் பிணை!

## இந்திய உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனுக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகள் பேரறிவாளன் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார்.

தற்போது தற்காலிக விடுப்பில் இருக்கும் பேரறிவாளனுக்கு இந்திய உயர்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி அவருக்கு சிறை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த விடுமுறை 10 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தன.

☞ 10



# தமிழர்களுக்கு ஐ.நா. நீதி வழங்கியே தீரும்

## மாவை சேனாதிராசா நம்பிக்கை

போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஐ.நா. நீதி வழங்கியே தீரும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நம்பிக்கை வெளியிட்டார்.

போர்க்குற்றம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நாடாக இலங்கை இருக்கின்ற போதும் அதனைப் பெரிதுபடுத்தாமல் அரசு இருக்கின்றது எனவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் அமர்வு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

☞ 10



# ஐ.நாவில் இலங்கைக்கு பெரும்பான்மை ஆதரவு

## இப்படிக் கூறுகின்றார் பீரிஸ்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 45 நாடுகளுள் 31 நாடுகள் இலங்கையின் நிலைப்பாட்டை ஆதரித்தன என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

☞ 10




## இன்றைய மின்வெட்டு விவரம்

நாட்டில் இன்று நாளை மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய P, Q, R, S, T, U, V, W ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு

☞ 10

# உக்ரைனிலிருந்து வெளியேற 27 இலங்கையர்கள் மறுப்பு

## 39 பேர் வெளியேற்றம்

உக்ரைனில் இருந்து வெளியேற முடியாது என 27 இலங்கையர்கள் தெரியப்படுத்தியுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின்

☞ 10

# கோட்டாபய தலைமையில் 23 இல் சர்வகட்சி மாநாடு!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டுக்கு திகதி நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

☞ 10

# அரச எம்.பிக்களின் கூட்டத்தை புறக்கணித்த விமலின் கட்சி

## கம்மன்பிலவும் பங்கேற்கவில்லை

அமைச்சரவையிலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்டிருந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

☞ 10








# என்னதான் ஆட்டம் போட்டாலும் ஆட்சியைக் கைப்பற்றமாட்டீர்!

## சஜித் அணிக்கு அரசு பதிலடி

சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் ஆட்சியை ஒருபோதும் கைப்பற்றவே முடியாது.

-இவ்வாறு ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன்

☞ 10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணம் கருதியே அந்தச் செய்தி – தகவல் – கசிய விடப்பட்டதாகத் தெரிகின்றது.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட முன்னரே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய – ஆளும் தரப்பின் பதினொரு பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த – அணியில் ஆளும் தரப்பின் முப்பத்தியொரு எம்.பிக்கள் திரண்டு விட்டனர் என்ற தகவல் ராஜபக்ஷக்களுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது.

ஒரு புறம் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில வெளியேற்றம், மறுபுறம் ஆளும் கூட்டமைப்பின் சகாக்கள் மற்றும் எம்.பிக்களை மதிக்காமல் செயற்படும் அரசுத் தலைமையின் எதேச்சாதிகாரப் போக்கு, இவற்றாலும் விலைவாசி உயர்வு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு, எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு என்று கொதித்துப் போயிருக்கும் வாக்காளரின் சீற்றம் போன்றவற்றாலும் குழம்பிப் போன மொட்டுக் கட்சிக் கூட்டணியின் பின் வரிசை எம்.பிக்கள் சுமார் பதினைந்து பேர் முந்திக் கொண்டு, மேற்படி முப்பத்தியொரு எம்.பிக்களுடன் அரசில் இருந்து வெளியேறத் தயாராகி விட்டனர் என்ற புலனாய்வுத் தகவல் அரசுத் தலைமைக்குக் கிடைத்ததாக சில வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்படி நடந்தால், இந்த அரசு அறுதிப் பெரும்பான்மையை இழந்து கவிழும் நிலைமை உருவாகி விடும்.

கப்பல் மூழ்கும் போக்கில் இருப்பது புரிந்தால் பெருச்சாளிகள் முந்திக் கொண்டு வெளியேற முற்படுவது வியப்பில்லைத்தானே...!

நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட அரசுத் தலைமை அதிரடிப் பதில் நடவடிக்கை எடுத்தது. அதில் ஒன்று தான் பதினான்கு எம்.பிக்களைத் தம் வசம் வைத்திருக்கும் சு.க.தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அவரது எம்.பிக்களுடன் அழைத்து நேற்றுமுன்தினம் சமரசம் பேசியமையும், நாட்டின் நிலைமை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு சர்வ கட்சி மாநாட்டை அழைக்க இணங்கியதும் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

அதேசமயம், தேசிய அரசு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் காட்டுவதன் மூலம், இதுவரை மொட்டுக் கட்சியில் அதிருப்தியுற்று, அதிலிருந்து வெளியேறி தனியாக இயங்க விரும்பிய ஒரு டசினுக்கும் அதிகமான எம்.பிக்களை அடக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

தேசிய அரசு அமைக்கும் முயற்சி எதிலும் தாம் சம்பந்தப்படவில்லை என்று ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினாலும், அப்படி ஒரு முயற்சி நடக்கின்றது அல்லது ரணிலுடன் பேசுவது போல வெளியில் பாசாங்கு காட்டப்படுகின்றது என அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இதேசமயம் அரசுக்குள் நடந்த இன்னொரு திருக்கூத்தையும் அரச வட்டாரம் ஒன்று சுட்டிக் காட்டியது.

ஒரு வருடத்துக்கு மேலாக டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை செயற்கையாக 202 ரூபாவில் பிடித்து – தேக்கி – வைத்திருந்தது அரசு.

வெளியில் – தனியார் புழக்கத்தில் – டொலரின் பெறுமதி 250 ரூபாவுக்குப் போன போது கூட அரசு அசைந்து கொடுக்கவில்லை.

டொலரின் பெறுமதியை மிதக்க விட்டு, அந்தப் பெறுமதியில் கடன் மீள் செலுத்துகையைக் கணக்கிட்டால், இலங்கைக்கு அழுத்தம் – பாதிப்பு – மேலும் அதிகமாகும். அதற்கு இடமளியோம் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கடந்த திங்களன்று கூறியிருந்தார்.

ஆனால் அது குறித்த செய்திகள் பத்திரிகையில் வெளியாகி, அந்த மை காய்வதற்கிடையில், அடுத்த நாளே டொலரின் பெறுமதி 238 ரூபா என்று, ரூபாவின் மதிப்பு குறைக்கப்பட்டது.

என்ன இந்தத் திடீர் அதிரடி மாற்றம் என்று தேடினால் அங்கும் நெருப்பில்லாமல் புகை வரவில்லை என்பது ஊர்ஜிதமாகியது.

இந்தியாவிடமிருந்து நூறு கோடி டொலர் கடனை எதிர்பார்த்து இலங்கை தவம் கிடக்கின்றது. அதனைப் பெறுவதற்காக புதுடில்லிக்குப் பயணமாகும் ஏற்பாட்டுடன் காத்துக்கிடக்கின்றார் இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

ஆனால், அந்தக் கடன் மீளச் செலுத்துகை மற்றும் விடயங்களை ஒட்டி சில நிபந்தனைகளை இந்தியா விதித்திருக்கின்றது என்றும், அவை தொடர்பில் இலங்கையின் நடவடிக்கைகள் சம்பந்தமான வழி வரைபடத்தை இந்தியா எதிர்பார்த்திருக்கின்றது என்றும் செய்திகள் வெளியானமை தெரிந்ததுதான்.

அதில் ஒன்று டொலரின் பெறுமதியை 202 ரூபா என செயற்கையாக வைத்திருக்கும் இலங்கையின் போக்குத் தொடர்பான இந்தியாவின் அதிருப்தியாகும்.

டொலரின் பெறுமதியை இப்படி செயற்கையாக வைத்திருக்கும் போது, அந்த அடிப்படையில் கடன் – கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது என்பதை இந்தியத் தரப்பு காட்டமாகக் கொழும்புக்குச் சுட்டிக்காட்டியதாம்.

அதனால்தான் திங்களன்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர், இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடி ஓரிரு மணித்தியாலங்களில் டொலரின் பெறுமதியை 238 ரூபா என்ற அடிப்படையில் மிதக்க விடும் முடிவு எடுக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கைக்குக் கடன் வழங்க இந்தியா விதித்த நிபந்தனைகளில் ஒன்று மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்பது.

இதற்கான முன்னாயத்தமாக தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான – தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான – நாடாளுமன்றத் தெரிவுக்குழு அண்மையில் கூடி, பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை ஒரு முறையாவது நடத்தி முடிக்கும் ஒரு யோசனைத் திட்டத்தை முன்வைத்திருந்தது. நாடாளுமன்றின் இப்போதைய அமர்வின் போது அது குறித்து இறுதித் தீர்மானம் எடுத்து, முடிவு நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்று முன்தினம் கூடவிருந்தது. ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் – இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தொலைபேசி உரையாடலை அடுத்து இந்த நாடாளுமன்றத் தெரிவுக்கு குழுவின் கூட்டம் இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டது.

ஜெய்சங்கரின் வழிகாட்டல் – வற்புறுத்தலுக்கு அமைய, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான முடிவைப் பிரதிபலிக்கும் தீர்மான அறிக்கை ஒன்றை மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எடுப்பதற்கு வசதியாக – அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக – அத்தெரிவுக்குழுவின் கூட்டம் கடைசி நேரத்தில் இன்றைய தினத்துக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

எது, எப்படி என்றாலும், தேர்தல் சீர்திருத்தம் தொடர்பிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு பெரும்பாலும் இன்று கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

நடைபெறவிருக்கும் கச்சதீவுத் திருவிழாவை பற்றிய செய்திகளை சேகரிப்பதற்காக அங்கு செல்வதற்கு யாழ்.செய்தியாளர்கள் தமது பெயர் விவரங்களை யாழ்.அரச அதிபரிடம் சமர்ப்பித்து இருந்தனர். அவை அனைத்தையும் கூண்டோடு வெட்டி ஒதுக்கி விட்டனர் கடற்படையினர் எனக் கைவிரிக்கின்றார் யாழ்.அரச அதிபர்.

கொழும்பிலிருந்து வரும் பத்து செய்தியாளர்களைக் கூட்டிப் போவதுதான் கடற்படையின் திட்டமாம்.

யாழ்.அரச அதிபருக்கும், கடற்படைக்கும், சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் ஓர் அடிப்படை விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கச்சதீவு இலங்கையின் பகுதிதான். ஆனால் அதற்கு முன் அது, யாழ்.மாவட்டத்தின் கீழ்தான் – யாழ்.மாவட்ட அரச அதிபரின் நிர்வாகத்தின் கீழ்தான் – வருகின்றது. யாழ்.மாவட்டத்தின் மத நிகழ்வு ஒன்றுக்கு உள்ளூர் செய்தியாளர்களை வெட்டி, ஒதுக்கி, கொழும்புச் செய்தியாளர்களுக்கு இடமளிக்க முயல்வது கூட ஒரு வகையில் மேலாதிக்கத் திணிப்புத் தான்.

யாழ். அரச அதிபர் என்ன செய்யப் போகின்றார்?

அமுல்பேபியின் பார்வைக்கு மட்டுமே பணிந்து பணியாற்றுவோம் என்று இருப்போருக்கு மக்கள் சேவை என்றால் என்னவென்பது புரியாமலிருக்கின்றது. இதுதான் யாழ்ப்பாணத்தின் துரதிர்ஷ்டம். நாம் என்ன செய்யமுடியும்?

**- மின்னல் -**

# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றம்

கொழும்பு, மார்ச் 10

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது மேற்படி சட்டமூலத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, விவாதத்துக்குச் சமர்ப்பித்தார்.

ஆளும், எதிரணி உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்த பின்னர், திருத்தங்கள் சகிதம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்குச் சபாநாயகர் சான்றுரை வழங்கிய பின்னர், அது அமுலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாள்தோறும் பிற்பகல் 2.30 மணிக்குப் பின்

# அரச நிறுவனங்களில் இனி ஏ.சி. கிடையாது

நாட்டில் நிலவும் எரிபொருள் மற்றும் மின்சாரப் பற்றாக்குறையைத் தொடர்ந்து பொதுச் சேவைகள் அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றைச் சேமிக்கும் நோக்கில் அரச நிறுவனங்களுக்காக வெளியிடப்பட்டுள்ள குறித்த அறிக்கையில்,

அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் வளி சீராக்கிகள் (ஏ.சி.) பிற்பகல் 2.30 மணிக்குப் பின்னர் நிறுத்தப்படும். தேவைக்கு அதிகமாகக் கொடுக்கப்படும் கூடுதல் எரிபொருள் கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, வெளி மாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளைக் கூட்டங்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக கொழும்புக்கு அழைப்பதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.






# யாழ். கல்விக் கண்காட்சி 2022

## JAFFNA EDUCATION FAIR 2022

*Your Future Begins Here...*

யாழ். கல்விக் கண்காட்சி 2022 எனும் உயர் கல்வி மற்றும் துறை சார் வழிகாட்டல் கண்காட்சி, நாளை மற்றும் நாளை மறுதினங்களில் யாழ்ப்பாணம், வலம்புரி ஹோட்டலில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விசேட நிகழ்வானது, வடமாகாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச தரத்திலான ஒரேயொரு உயர் கல்விக் கண்காட்சி என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது, உலகத் தரத்திலான உயர் கல்வி வாய்ப்புகளை வட பிராந்திய மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதையும், இலங்கையில் கிடைக்கக்கூடிய பல்வேறு உயர் கல்வித் தெரிவுகளையும் தொழில் துறைசார் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்வதையும் இலக்காகக் கொண்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற அதி சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் நடத்தி வரும் ‘எவல்யூன் இவன்ட்ஸ்’ நிறுவனம் ஒழுங்கு செய்திருக்கும் ‘யாழ். கல்விக் கண்காட்சி 2022’ என்ற இந்த நிகழ்வில், 35இற்கும் மேற்பட்ட உயர் கல்வித் துறையின் பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன. அத்துடன், மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆலோசனை மையங்களும் அமைக்கப்படவுள்ளன. இவையனைத்துக்கும் மேலாக, மாணவர்கள் தமக்குப் பொருத்தமான துறைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளத் தேவையான ஆலோசனைகள் அடங்கிய இரண்டு கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன. இவ்விரண்டு கருத்தரங்குகளிலும் பல்வேறு தொழிற்றுறை வல்லுநர்களும் ஆலோசகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இத்தனை சிறப்புகளும் வாய்ந்த இந்தக் கண்காட்சியில் உயர்கல்வியை நிறைவு செய்த மாணவர்கள், பாடசாலை இடைவிலகல் மாணவர்கள், இளம் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர் என, சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்தரப் பரீட்சைகளை நிறைவு செய்தவர்களுக்கு இந்தக் கண்காட்சி ஒரு அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவுள்ளது. தமது பெற்றோர் சகிதம் இக் கண்காட்சியில் கலந்துகொள்வதன் மூலம், இலங்கையில் உள்ள 2 இற்கும் மேற்பட்ட முன்னணி உயர் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, அந்நிறுவனங்களின் கல்வி ஆலோசகர்களுடன் கலந்துரையாடி, தமக்குப் பொருத்தமான உயர்கல்வித் துறையைத் தெரிவு செய்துகொள்ள முடிவதுடன், தமது வருங்கால கனவுத் துறைகளில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தவிர, தமது உயர்கல்வியை கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ரஷ்யா, சீனா, இந்தியா, மலேசியா போன்ற வெளிநாடுகளில் பெற்றுக்கொள்வதில் ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் இளம் மாணவர்கள் மற்றும் மேற்படி நாடுகளுக்குப் புலம்பெயர்வதில் ஆர்வமுள்ளவர்களும் இக்கண்காட்சிக்கு வருகை தருவதன் மூலம், தகுதிவாய்ந்த, பெறுமதி மிக்க கல்வி ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் புலம் பெயர்வது குறித்த ஆலோசனைகளையும் வல்லுநர்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொழில் புரியும் பிரதிநிதிகள் மற்றும் தமது இளநிலைப் பட்டப்படிப்புகளை நிறைவு செய்திருக்கும் இளநிலைப் பட்டதாரிகள் மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளுக்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக் காத்திருப்பவர்கள் மற்றும் தொழில் ரீதியான தகுதிகளை மேம்படுத்திக் கொள்ள விரும்புபவர்களும் கூட இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்வதன் மூலம், அவர்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கண்காட்சியிலேயே விசேட கட்டணச் சலுகையுடன் தாம் விரும்பும் துறைகளில் தம்மைப் பதிவு செய்துகொள்ளும் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கண்காட்சிக்கு வருகை தரும் மாணவர்களுக்கு, தகவல் தொழில்நுட்பம் (IT), மென்பொருள் பொறியியல் (Software Engineering), கணினி அறிவியல் (Computer Science), வியாபார முகாமைத்துவம் (Business Management), பொறியியல், சட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல், மருத்துவம், உளவியல், கட் டடக்கலை (Architecture), சந்தைப்படுத்தல் மற்றும் எண்மிய சந்தைப்படுத்தல் (Digital Marketing) உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை, முன்னணி பல்கலைக் கழகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும், கண்காட்சியில் தம்மைப் பதிவு செய்து கொள்பவர்களுக்காக வழங்கப்படவுள்ள விசேட புலமைப் பரிசில்களையும் கட்டணக் கழிவுகளையும் தமதாக்கிக்கொள்ள முடியும். மேலும் வெளிநாட்டுக் கல்வித் தெரிவுகள், நம்பகமான வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் அனுமதி வாய்ப்புகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இலவசமாக நடத்தப்படவுள்ள இந்தக் கல்விக் கண்காட்சியில், மாணவர்களும் அவர்தம் பெற்றோரும் கலந்துகொண்டு, இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**Main Sponsor :-**

A·P·I·I·T

Inspire love for learning

*Meet us on 11th & 12th @ Jaffna Education fair 2022. (Stall No : A1)*

# Grand Bridal Fashion Show

# யாழ்மண்ணில் இன்று!






'மாற்று மோதிரம்' இன்று இந்த பெயரை தெரியாமல் யாரும் இருக்கமுடியாது. பிரம்மாண்டம் என்றாலே அது அருந்ததியே.பல வருடங்களைக் கடந்தும் தலைநகரைத் தாண்டியும் மாற்று மோதிரம் எனும் மணப்பெண் அலங்காரக் காட்சி நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி வருகின்றமை அருந்ததியின் தனித்துவமே. நாடளாவிய ரீதியில் தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்களை மையப்படுத்தி நடைபெறும் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரகாட்சி கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற்றதை தொடர்ந்து இம்மாதம் யாழ் மண்ணில் இன்றைய தினம் மாலை 4 மணிக்கு செல்வா பெலஸ் மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது. பல மாவட்டங்களிலிருந்தும் வருகைத்தரும் 50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களின் பங்கேற்போடு பல சிறப்பு அதிதிகளும், பிரதம அதிதிகளும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்னர்.

இன,மத,மொழி பேதமின்றி இந்த சமூகத்தில் சாதித்துக்கொண்டிருக்கும் அழகுக்கலை நிபுணர்களை அனைவரையும் கௌரவிக்கும் இம் மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக , புகைப்பட , ஆடை அலங்கார மற்றும் யுயசஷ் றுழசம  அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறவுள்ளது. ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு திருமணசேவையும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை மக்களின் மனதை வென்றுள்ளது.

பல எதிர்பார்ப்புகளோடு எதிர்பார்த்து காத்திருக்கும் யாழ் மக்களின் நல் ஆதரவோடும் அவர்களின் நன்மதிப்பை பெற்ற மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி பிரம்மாண்ட முழக்கத்தோடு யாழ் மண்ணில் அரங்கேறப்போகிறது. எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் பிரம்மாண்டத்திற்கு அழைத்துச் செல்லும் 'மாற்றுமோதிரம்' நிகழ்வு நிச்சயம் வருகைத்தரும் அனைவரையும் திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

யாழ் மண்ணில் இன்று அரங்கேரவிருக்கும் பிரம்மாண்ட மணப்பெண் அலங்காரக் காட்சியில் நீங்களும் இணைந்திருங்கள்!







# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விக்கியின் மகா உபதேசம்

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நீண்ட ஆலோசனை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கினறனர்.

யாவரிலும் தவறு இருக்கின்றது, தவறை மாறி மாறிச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தால் நாம் – தமிழினம் – இப்போது எதிர்நோக்கியிருக்கும் பேரழிவில் இருந்த தப்பிப் பிழைக்க முடியாது என்று அவர் கூறுவது முற்றிலும் உண்மை.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – ஒற்றுமையின்றேல் அனைவருக்கும் தாழ்வே' என்ற தமிழர்களின் முதுமொழியைச் சுட்டிக்காட்டி அவர் வேதனைப்படுவதிலும் விடயம் இருக்கத்தான் செய்கின்றது.

தமிழ்த் தேசியம் பேசும் – அதற்காகப் போராடும் – தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்படுவது என்பது வரலாற்றின் கட்டாயம்.

ஆனால் இந்தத் தத்துவத்தை – மகா உபதேசத்தை – வழங்கும் நீதியரசர் விக்னேஸ்வரன் சில விடயங்களை அந்த உபதேசத்தில் சேர்த்திருப்பாராயின், அந்த உபதேசம் இன்னும் நேர்மைத் திறன் மிக்கதாக இருந்திருக்கும்.

ஐக்கியம் குறித்து இன்று உபதேசிக்கும் நீதியரசர் விக்னேஸ்வரன், இதனை இப்போதுதான் பேசுகின்றார் என்று யாரும் நினைத்து விடக் கூடாது.

2013 செப்டெம்பரில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுடன்தான் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தமிழர் அரசியலுக்குள் நுழைந்தார். அதுவரையில், தமது நீதிச் சேவைப் பணியில் ஓய்வுபெற்று சிவனே என்று சிவபூசையில் இருந்தவர் அவர்.

அந்தத் தேர்தலுக்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் அவரைத் தமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலுக்கு இழுத்து வந்தார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்.

தாம் அரசியலுக்கு நுழைய முன்னர் – சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் – வெறும் நடுநிலைப் பார்வையாளராக நின்று எந்தப் பக்கமும், எந்த அணியுடனும், எந்தத் தரப்புடனும் சேராமல் – நீதியரசராக அப்போது அவர் கருத்து வெளியிட்டார்.

அது நடந்தது 2013 ஏப்ரல் 26ஆம் திகதி. அன்றுதான் தந்தை செல்வாவின் 36ஆவது சிரார்த்த தினம். அதையொட்டி கொழும்பில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவு தின நிகழ்வில் பிரதான உரை நிகழ்த்தினார் நீதியரசர் விக்னேஸ்வரன். சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றோர் முன்னிலையில் ஆற்றப்பட்ட அந்த உரையிலும், இப்போது ஒற்றுமை பற்றி பேசும் அதே மகா உபதேசத் தத்துவத்தைத்தான் முத்தாய்ப்பாக வைத்து அந்தப் பேச்சை முடித்தார் அவர்.

இன்றும் அதே தத்துவத்தை – ஒற்றுமையின் கட்டாயத்தை – ஐக்கியத்தின் அவசியத்தை – வலியுறுத்தும் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் இந்த இடைப்பட்ட காலத்தில் என்ன செய்தார்? எப்படி நடந்து கொண்டார்?

அதுவும், வரலாற்றில் முன், பின் கிடைக்காத சந்தர்ப்பமாக தென்னிலங்கைப் பேரினவாதத்தின் பெரிய இரண்டு கட்சிகளும் சேர்ந்து தமிழர் தரப்புடன் சமரசம் பேசக் கூடிய சூழல் எழுந்திருந்த நிலையில்தான், கூட்டமைப்புக்குள் புகுந்து, அதிலிருந்து ஒரு தனி அணியை – கட்சியை – உருவாக்கினார் சி.வீ.விக்னேஸ்வரன். அவருடன் சேர்ந்து அரசியல் நடத்திய ஐங்கரநேசன், அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் போன்றோர் தனித்தனி அணியாகும் சூழலும் அப்போதுதான் வந்தது.

முன்னரும் ஐக்கியம் பேசிய நாங்களும் கூட, இதற்குள் வந்து – அரசியலுக்குள் புகுந்து – ஐக்கியக் குலைப்பு ஒன்றைச் செய்து, அதன் மூலம் அரசியலில் எங்கள் கதிரையை உறுதிப்படுத்தி விட்டுத்தான், இப்போது மீண்டும் ஐக்கியம் பற்றிப் பேசுகின்றோம் என்ற உண்மையை இப்போதைய உபதேசத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் சேர்த்திருப்பாராயின் அது இன்னும் நேர்மைத்திறன் பொதிந்ததாக இருந்திருக்கும்.

ஆனாலும், அதில் அவர் சுட்டிக்காட்டிய ஐக்கியம் பற்றிய விடயம் நூற்றுக்கு நூறு உண்மை. நியாயம். அதில் மறுப்பு ஏதுமில்லை.

# தமிழர் தேசம் மட்டுமன்றி பெண்கள் சமூகமும் தலை நிமிரும் காலத்தை உருவாக்குவோம்!

## டக்ளஸ் திடசங்கற்பம்



பெண்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் வகையில் தமிழர் தேசத்தை மட்டுமன்றி பெண்கள் சமூகமும் தலை நிமிரும் காலத்தை உருவாக்குவோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமைய நாடளாவிய ரீதியில் 1,000 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றும் திட்டத்தின் அடிப்படையில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலையை தேசிய பாடசாலையாக மாற்றும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

எமது உரிமைப் போராட்ட காலகட்டங்களிலும் சரி அதன் பின்னரான ஜனநாயக அரசியலிலும் சரி நான் பெண்களுக்கான உரிமையை ஆண்களுக்கு சரிநிகராகவும் சில சமயங்களில் அதற்கு சற்று அதிகமாகவும் கொடுத்து வந்திருக்கின்றேன்.

அதேபோன்று ஆயுதப் போராட்ட களமுனையில் முதல் வீரகாவியமான பெண்ணாகவும் எனது சகோதரியான மதிவதனி எனும் இயற்பெயர் கொண்ட சோபா வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

அதுமட்டுமல்லாது எனக்கும் கட்சிக்கும் மிக நெருக்கமான மனித உரிமை சட்டத்தரணியுமான மகேஸ்வரி வேலாயுதம் உள்ளிட்ட ஏராளமானவர்களையும் வன்முறையாளர்களால் இழந்திருக்கின்றேன்.

ஆனபடியால் எனக்கு இந்தப் போராட்டத்தின் வலிகள் நன்கு தெரியும். அதனால்தான் இந்தப் போராட்டத்தின் அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் நானும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புக்கூற வேண்டும் என்றதனடிப்படையில் அதற்கான தார்மீக பொறுப்பேற்று எமது மக்களின் மீள் எழுச்சிக்கு என்னாலான சேவைகளைத் தொடர்ந்து செய்துவருகின்றேன்.

அதேபோன்று எமது மக்களும் எனது அரசியல் பலத்தை பலப்படுத்துவதும் அவசியமாகும். அதனூடாகவே இன்றும் பல வகையான பலனை மக்கள் அடையமுடியும் என்றும் நம்புகின்றேன்.

இதேவேளை 72 களில் தரப்படுத்தலுக்கு எதிராக நாம் போராடியிருந்தோம். அதன் பின்னர் பல வருடங்கள் கழித்து நான் அமைச்சராக இருந்தபோது ஸ்ரான்லி வீதியில் 400 முதல் 500 பேர் என்னை வந்து சந்தித்து தரப்படுத்தலினூடாகத் தமக்கான பல்கலை நுழைவை ஏற்படுத்தித் தருமாறு கோரியிருந்தனர்.

நான் அதை ஏற்று அன்றைய ஜனாதிபதியுடன் பேசி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன்.

ஆனாலும் அன்று தரப்படுத்தலை எதிர்த்த நாம் அதன்பின்னர் அதை வேண்டும் எனக் கோரியமை எமது தமிழ் மக்களின் அன்றைய அரசியல் தலைவர்கள் விட்ட தவறாகவும், அவர்கள் எமது மக்களுக்கு ஏற்படுத்திய தோல்வியாகவுமே அதை நான் பார்க்கின்றேன்.

இதேவேளை தற்போது எமது மக்கள் மத்தியில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. இதை நாம் தான் இங்குள்ள அரசுடன் பேசித் தீர்வுகாணவேண்டும்.

அதைவிடுத்து பாரதப் பிரதமருக்கு கடிதமெழுதுகின்றனர். 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் அதுதான் எமது பிரச்சினைக்கான தீர்வுக்கு ஆரம்பப் புள்ளி என நான் கடந்த 30 வருடங்களுக்கு முன்பிருந்து வலியுறுத்தி வந்திருக்கின்றேன்.

எனது இந்தத் தீர்க்கதரிசனம்மிக்க கூற்றை 30 வருடங்களுக்கு முன்னர் இன்று ஏற்றுக்கொண்டது போல ஏற்றிருந்தால் இத்தனை அழிவுகளையும் துயரங்களையும் எமது மக்கள் கண்டிருக்க வேண்டி ஏற்பட்டிருக்காது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே எனது நிலைப்பாடு. அந்தவகையில் இனியாவது எமது மக்கள் சரியானது எது சரியானவர்கள் யார் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தேசியப் பாடசாலைகள் அமைப்பில் இணைக்கப்பட்டன 10 பாடசாலைகள்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் 8 பெண்கள் பாடசாலைகளும் 2 கலவன் பாடசாலைகளும் தேசிய பாடசாலை அமைப்பில் இணைக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் ஊடாகக் கல்வி அமைச்சின் அனுசரணையில் ஆயிரம் தேசிய பாடசாலைகள் வேலைத்திட்டத்தின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்த பத்து பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக அறிவிப்பதற்கான பெயர்ப் பலகைகள் பிரதமரால் அலரி மாளிகையிலிருந்து இணைய தொழில்நுட்பம் ஊடாக ஒரே தடவையில் திறந்து வைக்கப்பட்டன.

பெலி அத்த புவக்தண்டாவ தம்மபால மகளிர் பாடசாலை, பிபில யரோதரா மகளிர் பாடசாலை, தொம்பே தேவி பெண்கள் பாடசாலை, கல்முனை மஹ்முத் பெண்கள் பாடசாலை, கெகிராவ வித்யார்த்த மகா வித்தியாலயம், கேகாலை சுவர்ண ஜயந்தி மகா வித்தியாலயம், ஹற்றன் கெப்ரியல் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்ட் உயர் பெண்கள் பாடசாலை, தங்கொடுவ பௌத்த மகளிர் பாடசாலை மற்றும் வலஹந்துவ ஜனாதிபதி பெண்கள் பாடசாலை ஆகியன இவ்வாறு தேசியப் பாடசாலை அமைப்பில் இணைக்கப்பட்டன.

புதிதாக இணைக்கப்பட்ட 10 தேசிய பாடசாலைகளுடன் இலங்கையின் மொத்த தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 395 ஆக உயர்ந்துள்ளது. கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோர் சூம் தொழிநுட்பத்தின் ஊடாக பாடசாலைகளின் அதிபர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுடன் உரையாடினர்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# “எத்தனையோ இன்னல்களை எல்லாம் கடந்து தான் இவ் இடத்திற்கு வந்திருக்கிறேன்”

**Chandra’s Beauty Parlour அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் சுலக்ஷனா செல்வநாயகம் உடனான நேர்காணலிது.**



சுலக்ஷனா செல்வநாயகம்
உரிமையாளர்
Chandra’s Beauty Parlour
அழகுக்கலை நிறுவனம்

### ☞ உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் சுலக்ஷனா செல்வநாயகம். திருகோணமலை அலஸ்தோட்டத்தில் வசித்துவருகிறேன். 18 வயதிலேயே என் அழகுக்கலை பயணம் ஆரம்பித்துவிட்டது. தற்போது Chandra’s Beauty Parlour அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகிறேன். இந்த அழகுக்கலை நிலையத்தை ஆரம்பித்து இரண்டு மாதங்களே ஆகின்றன. எத்தனையோ இன்னல்களை எல்லாம் கடந்து தான் இவ் இடத்திற்கு வந்திருக்கிறேன். எனக்கு ஒரு அக்காவும் நான்கு அண்ணாக்களும் இருக்கின்றனர். சரியாக எனக்கு இரண்டு வயது இருக்கும்போதே என்னுடைய தந்தை இறந்துவிட்டார். அப்போது என் அம்மா தையல் தொழில் செய்து எங்களை வளர்த்தார். நான் இந்த நிலைமைக்கு வருவதற்கு மூலக் காரணமும் முழுக் காரணமும் என் அம்மா தான். அவருடைய உழைப்பும், ஊக்கமும், உதவியும் இல்லையென்றால் இன்று நான் இவ்விடத்தில் இல்லை என்றே கூறவேண்டும். என்னுடைய அம்மாவின் பெயர் சந்தரவதனா. அவருடைய பெயரையே என்னுடைய அழகுக்கலை நிலையத்திற்கு வைத்துள்ளேன். அம்மாவைப் போலவே எனது குடும்பமும், நண்பர்களும் எனக்கு நிறையவே ஆதரவளித்துள்ளனர் என்பதை இவ்விடத்தில் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

### ☞ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

அழகுக்கலை சிறுவயதிலிருந்தே எனக்கு பிடித்தமானதொன்று. பக்கத்து வீட்டு சிறுவர்களை அழைத்து அவர்களுக்கு ஒப்பனை செய்து அழகுபடுத்திப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும். ஆனால் அதை செய்து பார்ப்பதில் எனக்கு மிகவும் விருப்பம். அதே சமயம் படிக்கும் காலத்தில் பரதநாட்டியம் ஆடுவது எனக்கு பிடிக்கும். ஒரு பரதநாட்டிய ஆசிரியாக வேண்டுமென்றே அப்போது நினைத்தேன். ஆனாலும் எனது உயர்தரத்தை கற்று முடித்தபின்னர் எதிர்பாராத விதமாக அழகுக்கலையை கற்கும் வாய்ப்பு கிடைத்தது. அழகுக்கலையை ஆசிரியர் கார்த்திகாவிடம் இலவசமாக கற்றுக்கொண்டேன். இலவச கற்கையிலும் அழகுக்கலை பொருட்களை நாம் தான் காசு கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. வீட்டில் கஷ்ட நிலைமை. என்னிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. அந்த சமயத்தில் என் ஜான்சி அண்ணியார் தான் பணம் கொடுத்து உதவினார். அதன் பிறகு அழகுக்கலையை கற்று இரண்டு சான்றிதழ்களை பெற்றுக்கொண்டேன். 1 வருடத்திற்கு பின் கல்யாணி ஆசிரியரிடம் அழகுக்கலையை முழுமையாக கற்றுக்கொண்டேன். அவரிடம் நான் கற்கும் காலத்தில் தான் அழகுக்கலை மேல் எனக்கிருந்த ஆர்வம் அதிகரித்தது. என்னுடைய இந்த ஆர்வத்தை கண்டு எனது குடும்பமும் என்னை ஊக்குவித்தது. தற்போது வெற்றிகரமாக எனக்கென்றவொரு அடையாளத்தை உருவாக்கியிருக்கிறேன்.

### ☞ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

அழகுக்கலையில் எதிர் நோக்கும் சவால்கள் என்பதை விட இந்த துறையில் ஆரம்பத்திலிருந்தே பல சவால்களுக்கு முகங்கொடுத்தே இவ்விடத்திற்கு வந்திருக்கிறேன். என்னை தாழ்த்தி பேசி என்னை அவமானப்படுத்துபவர்களுக்கு முன் நான் வாழ்ந்துகாட்டவேண்டுமென்பது எனக்கான ஒரு சவால். அழகுக்கலையில் சவால் என்பது எனது வாடிக்கையார்களுக்கு எப்போதும் தரமான சேவையை வழங்கவேண்டும் என்பதே. இன்னும் பல வாடிக்கையாளர்களை பெருக்கிக் கொண்டு என் தொழிலை அடுத்தகட்டத்திற்கு நகர்த்த வேண்டும். இதற்காக அர்ப்பணிப்போடு அயராது உழைத்துக்கொண்டிருக்கிறேன்.

### ☞ அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலையை கற்ற பின்னர் ஒரு அழகுக்கலை நிலையத்திற்கு பணிக்கு சென்றேன். வேலைக்கு சென்றால் தான் கஷ்டங்கள் தீரும் என்பது பலரும் கூறு வது. ஆனால் எனக்கு வேலைக்குச் செல்லும் போது தான் கஷ்டங்கள் அதிகமாகியது. போக்குவரத்து பிரச்சினை, பணியிடத்தில் என்னோடு வேலை செய்யும் சக பெண்கள் என்னை ஒதுக்கி வைத்தமை என பல இடர்களுக்கு மத்தியிலும் வேலைக்குச் சென்றேன். நான் பணிபுரிந்த அழகுக்கலை நிலையத்தின் உரிமையாளர் மைதிலி அவர்கள் என்னை நன்றாக ஊக்குவித்தார். இருப்பினும் ஒரு கட்டத்தில் என்னால் பணி புரிய முடியாமல் போனதும் வீட்டிலேயே இருந்துவிட்டேன். வீட்டிலிருந்து சிறு சிறு ஓர்டர்கள் செய்ய ஆரம்பித்தேன். அப்போது நான் பணிபுரிந்த இடத்தில் வந்த வாடிக்கையாளர்கள் என்னிடம் ஒப்பனைக்காக வருகைத்தர ஆரம்பித்தனர். இதனை நான் ஒரு வாய்ப்பாக கருதினேன். வீட்டிலிருந்து அலங்காரங்களை செய்ய இடவசதி போதவில்லை. பிறகு வீடோடு சேர்த்து சிறு கடைபோட்டு அழகுக்கலை நிலையத்தை ஆரம்பித்தேன். அப்படி ஆரம்பித்தது தான் தற்போது பல வாடிக்கையாளர்கள் என்னை தேடிவருகின்றனர். இதனை நான் எனக்கான வாய்ப்பாகவே பார்க்கிறேன்.

நான் வீட்டிலே வேலைசெய்து பெற்றுக்கொண்ட பணத்தை சேமித்து தான் சொந்தமாக அழகுக்கலை நிலையத்தை ஆரம்பித்தேன். இதை நான் ஒரு சாதனையாகவே பார்க்கிறேன். எனது முதல்பெண் அலங்காரத்தினை பார்த்து பலரும் பாராட்டினர். அதன் பிறகு நிறைய ஓர்டர்கள் வர ஆரம்பித்தது. அழகுக்கலை தொடர்பான போட்டிகளுக்கு நான் தவறாமல் கலந்துகொள்வேன். அவ்வாறு கலந்துகொண்டு விருதுகளையும் வென்றுள்ளேன்.

### ☞ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

நிறைய கஷ்டங்கள் வந்தாலுமே பின்வாங்க கூடாது. யார் நம்மை தாழ்த்தி பேசினாலும் அதை புறக்கணித்து விட்டு நம் வேலையில் மட்டுமே கவனத்தை செலுத்தவேண்டும். யார் நம்மை அவமானப்படுத்தினாலுமே அதை பொருட்படுத்தாமல் நம்முடைய இலக்கை அடைய முழுமூச்சாய் முயற்சி செய்து அதனை நிறைவேற்றிக்காட்டவேண்டும். அவர்களுக்கு நாம் வீண் பதில்கூறத்தேவையில்லை. நமது செயலும் அதன் மூலம் கிடைக்கும் வெற்றியுமே நாம் அவர்களுக்கு திருப்பிதரும் பதிலடியாகும்.



காலைக்கதிர்
Kalaikkathir

# தொடர் துன்புறுத்தலை நிறுத்துக அரசை வலியுறுத்திய அமெரிக்கா!

சிவில் சமூகம், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தலை நிறுத்துமாறு அமெரிக்கா இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் பேசிய அமெரிக்கா, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான இலங்கையின் முயற்சியையும் 40 இற்கும் மேற்பட்டவர்கள் சமீபத்தில் விடுவிக்கப்பட்டமையும் வரவேற்றுள்ளது.

இருப்பினும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு இணங்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கருத்துச் சுதந்திரம் இவற்றுள் முக்கியமானது என்றும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து நிரந்தரமான அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் நல்லிணக்கத்தை மேம்படுத்த, காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை திறம்பட, சுதந்திரமாக, வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் பாதுகாப்பு அமைச்சிலிருந்து வெளியேறிமை மற்றும் சில சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் ஈடுபடுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையும் அமெரிக்கா வரவேற்றுள்ளது.

## சுற்றுலாப் பயணிகளுக்கு நீண்ட கால விசா ஏற்பாடு!

### அரசாங்கத்தின் அறிவிப்பு

இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு நீண்ட காலவீசாக்களைவழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடு செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்கு சலுகை வழங்கும் நோக்கில் இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மேற்படி யோசனை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கணிசமான அளவில் அதிகரிக்கும் என நம்புவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் இலங்கையில் முதலீடு செய்யவும், வேலை செய்யவும் மற்றும் வாழவும் ஊக்குவிக்கும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

## தந்தையின் போதையால் தான் நிம்மதியிழந்ததாக மாணவியொருவர் அச்சுவேலிப் பொலிஸில் தஞ்சம்

வீட்டில் தன்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை எனக் கூறி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்த மாணவியை, பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மதுபோதையில் வரும் தந்தை, தாயுடன் சண்டை பிடிப்பதாகவும் இருவராலும் தான் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை எனத் தெரிவித்து மேற்படி மனைவி பாடசாலை சீருடையுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை தஞ்சம் அடைந்துள்ளார்.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 7 ஆம் தரத்தில் கல்வி கற்கும் 12 வயதுடைய மாணவி, தினமும் தந்தை மதுபோதையில் வந்து தாயாருடன் சண்டை பிடிக்கிறார் எனவும் இதனால் தன்னுடன் ஒவ்வொருநாளும் வாக்குவாதத்திலும் சண்டையிலும் ஈடுபடுகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாணவி வீட்டின் மூத்த பிள்ளை எனவும் இவரை விட இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர் எனவும் பொலிஸார் மாணவி தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை தம்மிடம் தஞ்சமடைந்த மாணவியை பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## 'மதுபான விநியோகங்கள் நிறுத்தம் வெளியான தகவல் பொய்யானது!

### மதுவரித் திணைக்களம் அறிவிப்பு

இம்மாதம் 22 ஆம் திகதி முதல் மதுபான விநியோகம் நிறுத்தப்படும் என வெளியான தகவல் உண்மையில்லை என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டால் ஏற்பட்ட எதனோல் தட்டுப்பாடு காரணமாக மது உற்பத்தி நிறுத்தப்படும் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் மேற்படி செய்தி தொடர்பாகத் தெளிவுபடுத்தும் வகையில் மதுவரித் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டில் 23 உரிமம் பெற்ற கலால் டிஸ்டில்லரிகள் மதுபானத்தை உற்பத்தி செய்துவருகின்றன என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதனோல் மற்றும் தேவையான பிற மூலப் பொருள்களை உள்ளூர் சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

## தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு அதிசொகுசு உல்லாச கப்பல் சேவை

தமிழகத்திலிருந்து இலங்கைக்கான அதிசொகுசு உல்லாச கப்பல் சேவை இந்தியாவால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுவே இந்தியாவின் தமிழகத்திலிருந்து இலங்கைக்கான முதலாவது உல்லாச கப்பல் சேவை என அச்சபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் முதலாவது பயணம் சென்னையில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்றும் மேற்படி கப்பலில் தங்கும் அறை வசதி உள்ளடங்கலாக பயணிகளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் பயணிக்க விரும்பும் பயணிகள் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றிருப்பது அவசியம் என்பதுடன் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையையும் கொண்டிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் சார்புநிலையை முறியடிக்க புறப்பட்ட வெளிநாடு தூதரக பெண்கள்!



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இலங்கைக்கான வெளிநாட்டு தூதரகங் களின் ஒன்பது பெண் தலைவர்களும், உயர்மட்ட உள்ளூர் பெண் அரசியல்வாதிகளும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 'சார்பு நிலையை முறியடித்தல்' என்ற நோக்கத்தில் ஒன்று கூடினர்.

இந்தோனேசியாவின் தூதுவர் டெவி குஸ்டினா டோபிங் இந்த நிகழ்வை தொகுத்து வழங்கினார் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தக்கூடிய புதிய பங்காளிகளை சந்திப்பதற்கும் புதுமையான திட்டங்களை ஆராய்வதற்கும் இந்தப் பிரதிநிதிகள் முதல் முறையாக ஒரு குழு வாகச் சந்தித்தனர். இராஜ தந்திர மற்றும் பலதரப்பு சமூகத்தின் பங்கேற் பாளர்களில் ஜூலி சுங் (அமெரிக்கா), டிரைன் ஜோரன்லி எஸ்கெடல் (நோர்வே), தஞ்சா கோங்ரிஜ்ப் (நெதர் லாந்து), சாரா ஹல்டன் (யுகே), ரீட்டா மனெல்லா (இத்தாலி), டெமெட் செகெர்சி யோக்லு (துருக்கி), ஹோ தி தான் ட்ரூக் (வியட்நாம்) மற்றும் சிம்ரின் சிங் (ஐ.எல்.ஓ.) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இந்தநிலையில் இலங்கையில் பெண்களுக்கான வலுவூட்டல் துறையில் ஒத்துழைக்கும் முயற்சியின் முதல் முயற்சி இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்காலத் திட்டங்களில் வழி காட்டுதல் அமர்வுகள், தன்னார்வ வாய்ப்பு கள் மற்றும் மாணவிகளின் பாடசாலை வருகை ஆகியவை அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவை மீறி ஏனைய நாடுகள் இலங்கைக்கு என்றுமே அழுத்தங்களை பிரயோகிக்கமாட்டா!

### முன்னாள் எம்.பி. சரவணபவன் கருத்து



தமிழர்களின் அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் இந்தியாவை மீறி ஏனைய நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்காது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்தார்.

யாழில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், ஐ.நாவில் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினை தொடர்பாக உரியநடவடிக்கைஎடுக்கவேண்டும் என இந்தியா வலியுறுத்தியமை மன ஆறுதலைத் தருவதாகப் கூறினார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மட்டுமே இந்தியாவால் வலியுறுத்த முடியும் என்றும் அதனை மீறி அவர்களால் இலங்கை இறையாண்மைக்குள் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது என்றும் சரவணபவன் தெரிவித்தார்.

ஏற்கனவே இருக்கும் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பன மக்களுக்கு கிடைத்திருந்தால் ஜனநாயக வழிகளில் போராட்டத்தை நடத்தி அதற்கு மேலும் கோரியிருக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவை மீறி எந்தவொரு நாடும் இதனை வலியுறுத்த முடியாது என்பதால் அவர்களுடன் இணைந்து இலக்கை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சரவணபவன் குறிப்பிட்டார்.

# எமது நாட்டின் தீர்மானிக்கும் ஆற்றலுள்ளவர்களாக பெண்கள்!

## பிரதமர் மஹிந்த பெருமிதம்



எமது நாட்டின் தீர்மானிக்கும் ஆற்றலுள்ளவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற 2022 சர்வதேச மகளிர் தின கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இந்த வருட சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வு இடம்பெற்றது.

துணிச்சலான பெண்களைப் பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்களின் உற்பத்தி பொருள் கண்காட்சி மற்றும் விற்பனை நிலையத்தை பிரதமர் பார்வையிட்டார்.

சர்வதேச தரத்துக்கு ஏற்ப 10 சர்வதேச மொழிகளை பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்தையும் பிரதமர் இதன்போது ஆரம்பித்து வைத்தார்.

தியனிய வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவிகளுக்கு இலவச சுகாதாரப் பொருள்கள் விநியோகிக்கும் செயற்பாட்டின் இரண்டாம் கட்டம் பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷவின் தலைமையில் குறியீட்டு ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இன்று நாம் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாட மறக்கவில்லை. நாம் மட்டுமன்றி உலகில் உள்ள பல நாடுகள் பல பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் இந்த சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாட மறக்கவில்லை. அது தொடர்பாக நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த சர்வதேச மகளிர் தினத்தில், நமது நாட்டிற்கும், எனது அரசியல் வாழ்விற்கும் சிறந்த முன்னுதாரணமாக விளங்கிய ஒரு பெண்மணியை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க. 1970 ஆம் ஆண்டு இலங்கையின் இளம் நாடாளுமன்ற உறுப்பினராக நான் நாடாளுமன்றம் சென்றபோது சிறிமாவோ பண்டாரநாயக்கவே எனது தலைவியாக விளங்கினார்.

அரசியலில் நான் கண்டிராத துணிச்சலான தலைவி அவர். அதேபோன்று நாட்டின் மீது அன்புடனும், தேச உணர்வுடனும் நாட்டை வழிநடத்திய தலைவியொருவர். இலங்கையில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அந்தக் காலக்கட்டத்தில் அது ஒரு பெரிய துணிச்சலான நடவடிக்கை என்று கூறலாம். வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அத்துடன் நிறுத்தவில்லை.

அவர் தனது நாட்டை வளமாக்குவதற்கு நம் நாட்டின் உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப துணிச்சலாக உழைத்தார். இலங்கையை விவசாயத்தில் தன்னிறைவு அடையச் செய்வதற்கும், உள்ளூர் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் மிகுந்த உறுதியுடன் பாடுபட்ட தலைவி திருமதி சிறிமாவோ ஆவார். அதுதான் இலங்கையின் பெண்மை என்று நினைக்கிறேன்.

நாட்டை தன்னிறைவு அடையச் செய்ய உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அயராது உழைத்த போது, பல விமர்சனங்களையும் சவால்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. இன்று போன்றுதான். உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மஞ்சள் செடியில் இருந்து எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்ய முயலும் போது பெரிய சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்க எதிர்கொண்ட அனைத்து சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் நாமும் முகம் கொடுக்கின்றோம். நம் நாட்டில் பெண்கள் என்ன விரும்புகிறார்கள், நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி பெண்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். - என்றார்.

# வவுனியா கொமர்ஷல் வங்கியில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்









கொமர்ஷல் வங்கியின் வவுனியாக் கிளை இரண்டாவது வருடமாக இம்முறையும் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிரைக் கௌரவிக்கும் விதத்தில் நிகழ்ச்சிகளை நடத்துகின்றது.

இவ்வருடத்துக்கான மகளிர் தின பிரதான நிகழ்வு வங்கிக் கிளையின் கிளை முகாமையாளர் யோகச்சந்திரா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக White Store Pvt Ltd மற்றும் Sinbon Pvt Ltd ஆகியவற்றின் நிறைவேற்று அதிகாரியான திருமதி கல்பனா பிரபாகரனும், சிறப்பு விருந்தினராக சஞ்சனா பிளவர்ஸின் உரிமையாளர் திருமதி சங்கீதா சர்மிளாவும் கலந்து சிறப்பித்தனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொடர்ச்சியாக இம்மாதம் முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை கொமர்ஷல் வங்கியின் வவுனியாக் கிளை ஒழுங்கு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலை விலையில் இலங்கை சாதனை

பெப்ரவரி மாதத்தில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பால் உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் தேயிலை ஏலத்தில் இலங்கை தேயிலை விலை 725 ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 'சிலோன் தேயிலை' கொள்வனவாளர்களில் இரண்டாவது பெரிய நாடாக ரஷ்யா திகழ்ந்தது.

இருப்பினும் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக உலகளவில் பொருள்களின் விலை அதிகரித்துள்ளனர் எனக் கொழும்பைத் தளமாகக் கொண்ட தரகு நிறுவனம் போர்ப்ஸ் அண்ட் வால்கெர் தெரிவித் துள்ளது.

ரஷ்யாவிற்கு எதிராக மேற்கொண்ட பொருளாதாரத் தடைகளால் ரஷ்ய ரூபிள் நாணயம் 77 இல் இருந்து 110 ஆக சரிவடைந்துள்ளது. இதனால் வெளிநாட்டு நாணயத்தின் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்த ரஷ்யா கடன் வட்டி வீதத்தை 20 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மார்ச் 01, 02 ஆம் திகதியில் நடந்த ஏலத்தில் இலங்கை 49.8லட்சம் கிலோகிராம் தேயிலையை விற்பனை செய்துள்ளது. ஒரு வாரத்துக்கு முன்னர் 6 லட்சம் கிலோகிராம் தேயிலை விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன் கடந்த ஆண்டு 645.95 (3.33 ரி.எஸ்.டி.) ஆகக் காணப்பட்ட தேயிலை விலை பெப்ரவரி மாதத்தில் 725.63 (3.60 ரி.எஸ்.டி. ) ஆக உயர்வடைந்துள்ளது.

உயர்தர தேயிலைக்கான கேள்வி அதிகமாகவும் குறைந்த தரம் கொண்ட தேயிலை குறைந்த விலையில் காணப்பட்டதாகவும், தேயிலை தரத்துக்கேற்ப விலைகள் காணப்பட்டன எனவும் சிலோன் தேயிலை தரகர்கள் தமது அறிக்கையில் தெரிவித்தனர்.

மேலும் தேயிலையின் தரங்களுக்கேற்ப விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன என போர்ப்ஸ் அண்ட் வாள்கெர் தரகு நிறுவனம் தெரிவித்திருந்தது.

மேலும் 2021 இல் கொரோனாத் தொற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்ட துறைகளில் தேயிலை தொழில் துறையும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்துக்கு புதிய தலைவர்



இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம். ஆர். டபிள்யூ. டி சொய்சா நியமிக்கப்பட்டுள்ளார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறையாளர்களே இன்றைய கிழக்கு மாகாண அரச பிரதிநிதிகள்!

## சாணக்கியன் எம்.பி. மன்றில் சாட்டை



கொழும்பு, மார்ச் 10

நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படும் போது அரசாங்கத்தின் கைக்கூலியாகச் செயற்படும் கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு உலகம் முழுவதும் வாழும் மகளிருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக இன்றைய நாளுக்கான தலைப்பிற்கமைய பேசப்படுவதை விட நாடு முகம் கொடுத்திருக்கும் பாரிய பிரச்சினைகளான மின் விநியோக துண்டிப்பு, சமையல் எரிவாயு தட்டுப்பாடு இந்த விடயங்களைப்பற்றி உரையாற்றவிரும்புகிறேன்.

அண்மையில் நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகல்லாறு பிரதேசத்தில் முன்னெடுத்த போராட்டத்துக்கு வந்த இளைஞர்கள் மின்விநியோக துண்டிப்பிற்குக் கடுமையான எதிர்ப்பை அந்த விடயத்தில் வெளிப்படுத்தினார்கள்.

அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்ளும் வழிமுறை தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்க நினைக்கிறோம். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி பொருளாதார நெருக்கடி தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் தன்மை தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகள் யோசனைகளை முன்வைத்தமையைத் தொடர்ந்து முக்கிய இரு அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உட்பட மாவட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மௌனம் காப்பது கவலைக்குரியது.

உதாரணமாக கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கிய அமைச்சர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறி மக்கள் படும் துயரம் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு கிழக்கில் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குபவர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் அளவிற்கு திறனில்லாதவர்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

இருந்தாலும் மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டு வெறும் வாய்மொழி மூலமான நிலைப்பாட்டையாவது குறிப்பிட வேண்டும். உரப்பிரச்சினையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மீன்பிடித்துறை அமைச்சரின் செயலற்ற திறமையால் வடக்கு, கிழக்கு மாகாண மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதனையடுத்து வடக்கு, கிழக்கில் சிறுகைத்தொழில் அதாவது வெதுப்பகங்கள் கூட இயங்குவதில்லை. பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை எதிர்க்கக் கோரி மலையகத்துக்குச் சென்றிருந்த போது அங்கும் இவ்வாறான நிலைமையை அவதானிக்க முடிந்தது.

விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசியல்வாதிகள், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் பதவி வகித்துக்கொண்டு, பதவி ஆசைக்காக தங்களுக்கு அரசாங்கத்தால் சலுகை கிடைப்பதால் மக்கள் படும் துயரத்தைக் கண்டும் அமைதி காக்கிறார்கள்.

அரசாங்கத்தில் இருக்கும் முக்கிய தரப்பினர்கள் கூட மக்கள் தரப்பில் இருந்துகொண்டு கருத்துரைக்கையில் ஏன் வியாழேந்திரன், பிள்ளையான் ஆகியோரால் மக்களுக்காக குரல் கொடுக்க முடியாது. மக்களுக்காக இவர்கள் அரசியலுக்கு வரவில்லை. தங்களின் சுய நலத்துக்காகவும், செய்த கொலை, கற்பழிப்பு ஆகியற்றை மறைப்பதற்காகவும் நாடாளுமன்றுக்கு வருகை தந்துள்ளார்கள் என்றும் குறிப்பிடலாம்.

மகளிர் தினமன்று சபை ஒத்திவைப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் பிரேரணையொன்றை கொண்டு வரவுள்ளதை அவதானித்தேன். அந்தப் பிரேரணையில் பல காலங்களுக்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரேமினி என்ற சகோதரியைக் கற்பழித்து கொலை செய்தவர் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான கட்சியை வைத்திருக்கும் ஒருவர் தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

இவ்வாறானவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளார்கள். மகளிர் தினத்தையொட்டி பிரேரணை கொண்டு வரும் வேளை இதனை பேசவிரும்புகிறேன்.

எமது மாவட்டத்தில் மிகமோசமான நிர்வாகம் தற்போது முன்னெடுக்கப்படுகிறது. வட்டாரத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு 40 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

அந்த நிதி ஒதுக்கீட்டை கூட எடுத்து இன்று ஆளும் கட்சியை சேர்ந்த ஒருசிலர் தங்களின் பிரதேச அபிவிருத்தி மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் பதவியை வைத்துக்கொண்டு அந்த 40 லட்சத்தையும் நாங்கள் தான் வழங்குவோம் எனக் குறிப்பிடுகிறார்கள்.

அவ்வாறாயின் இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லையா, வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்டவருக்கு அந்தத் தெரிவை செய்ய முடியாவிடின் பிறகு எதற்கு ஜனநாயகம்?

உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து விட்டு மாவட்ட அபிவிருத்திக் குழுவிற்கு முழுமையாகப் பொறுப்பை வழங்குங்கள். இந்த விடயத்தை ஆளுநரிடமும் அறிவித்தோம். நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படும் போது அரசாங்கத்தின் கைக்கூலியாக செயற்படுபவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். - எனத் தெரிவித்துள்ளார்.

# மல்லிகை செய்கைக்கு ஒதுக்கிய காணிக்கு கஜேந்திரன் எம்.பி. தடை ஏற்படுத்துகிறார்!

## செய்கையாளர் ஒருவர் காட்டம்




வவுனியா புளியங்குளம் பழையவாடியில் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மல்லிகை மாதிரி செய்கைக்கு பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்டு அளவீட்டுப்பணிகள் இடம் பெற்றபோது அங்கு வருகை தந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு தனது மல்லிகை செய்கை காணிக்கு தடை ஏற்படுத்தும் செயற்பாடுகளை அங்குள்ளவர்களை வைத்து முன்னெடுத்து வருகிறார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதியொருவர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எமது சமூகத்துக்கு எதிராக இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதை உடன் நிறுத்திக்கொள்ளுமாறும் வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது மல்லிகை செய்கையாளரான தம்பாப்பிள்ளை பிறேமேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

புளியங்குளம் பழையவாடிக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு இடம்பெற்ற காணி அளவீட்டுப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டார்.

அங்கு வந்த செல்வராசா கஜேந்திரன், காண்டீபன் ஆகியோர் பொய்க்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எனது செய்கைக்கு தடை ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

மக்களின் பங்களிப்புடன் லக்சபான மின்சாரம் செல்லும் நிலத்துக்கு அடியில் மின்சார சபையினரின் அனுமதியுடன் அரச நில அளவைத் திணைக்களத்தால் அளவீட்டுப்பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்து எனது இந்த நடவடிக்கைக்குத்தடைஏற்படுத்தும்செயற்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டுள்ளார்.

அங்கு இருக்கும் மக்கள் எவ்விதமான எதிர்ப்புக்களையும் எனக்குத் தெரிவிக்கவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி உறுப்பினர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை. அங்கு கூடி நின்று எனது திட்டத்துக்கு தடை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த செயற்பாடுகளை கஜேந்திரன் எம்.பி, உடன் நிறுத்தி கொள்ள வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய அரசு அமைப்பு குறித்து மஹிந்தவுடன் ரணில் பேச்சு



தற்போது நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை என ரணில் விக்கிரமசிங்கவிற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவுடன் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் கலந்துரையாடினார் எனவும் ஆனால் இருவருக்குமிடையில் அல்லது ஜனாதிபதியுடனோ உத்தியோகபூர்வ கலந்துரையாடல்கள் எதுவும் நடைபெறவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக உத்தியோகபூர்வ மற்ற முறையில் கூட விக்கிரமசிங்க எந்தக் கலந்துரையாடலையும் நடத்தவில்லை என வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று பொருளாதார உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறு கோரி வரும் ரணில் விக்கிரமசிங்க, அனைத்து அரசியல் கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனக் கோரியுள்ளார்.

குறைந்தபட்சம் 15 ஆண்டுகளுக்கு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய தேசியக் கொள்கையை வகுக்க அனைத்துக் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க அழைப்புவிடுத்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் -304

இந்த வரலாறுகளை நான் எழுதிய போது சிலர் தங்களின் அப்பிப்பிராயங்களில் இவற்றை எழுதி என்ன பிரயோசனம் காணப்போகிறோம், வேறு எதுவும் செய்யலாம், இந்த மக்களும் அவர்களது தலைவர்களும் திருந்தவே போவதில்லை என்று ஆதங்கப்பட்டார்கள்.

கட்சித் தலைவர்களும் புலம்பெயராளரும் நடத்திய அரசியலை அவதானித்த போது பல தடவைகள் நானே தளும்பி எனது ஆதங்கங்களை ஆசிரியர் வித்தியாதரனுக்கு வெளிப்படுத்தினேன். அவரோ அவற்றைக் கணக்கெடுக்காது நீங்கள் எழுத வேண்டும், இவ்வகையான வரலாறுகள் பதியப்பட வேண்டும் எனவும் சொன்னார். தான் எவ்வளவு காலமாக எத்தனை செய்திகளை வெளிக்கொணர்ந்திருக்கிறேன், ஆனால், நான் குறிப்பிடுபவை சிலவற்றைதானே தெரிந்திருக்கவில்லை, தான் அப்பொழுது சிறுவன் அல்லது பள்ளி மாணவன் எனச் சொல்லி எழுதுங்கள் என அவர் அப்போது தந்த ஊக்கங்கள்தான் மேலும் தொடர வைத்தன.

என்றாலும் எனக்கென்னவோ பின்வரும் கதை பலவற்றை உணர்த்துவதாகவும் அனுவபங்களைத் தருவதாகவும் தெரிகிறது.

இந்த உணர்வுகளால்தானோ என்னவோ ஆசிரியர் வித்தியாதரன் கூட, இந்த மக்களுக்காகத்தானா எங்கள் இளைஞர்கள் குப்பியைக் கழுத்தில் கட்டி, மரணத்தைத் தேடி அணைத்துப் போராடிக் காவியமானார்கள் என்று கேட்டாரோ என்று கூடத் தோன்றுகின்றது.

### 759.அது என்ன கதை?

காட்டில் ஒரு கழுதை புலியிடம் ‘புல் நீலநிறமானது’ எனச் சொல்ல புலி மறுத்து. ‘இல்லை அது பச்சை’ என்றதால் வாக்குவாதம் பெருத்து, அதன் மத்தியஸ்திற்காக கழுதையும் புலியும் ராஜாவான சிங்கத்திடம் சென்றனர்.

முன்னே ஒடிச்சென்ற கழுதை ‘மகாராஜாவே! புல் நீலநிறந்தானே?’ எனக் கேட்க சிங்க மகாராஜாவும் ’ஆமாம். புல்லின் நிறம் நீலம்தான்’ என ஆமோதித்தது. கழுதை ’தொடர்ந்தும் புலி என்னோடு ஒத்துப் போகவில்லை. இப்பொழுதும் இல்லை. அது புல் பச்சைதான் என்று சண்டையும் பிடித்துச் சீண்டிக் கொண்டே இருக்கிறது. ஆகவே அதைத் தண்டிக்க வேண்டும்’ எனக் கேட்க மகராஜாவும் புலி இனிமேல் 5 வருடங்களுக்கு வாய்திறக்கக் கூடாது எனத் தண்டனை தந்தது. கழுதை பரவசமாக குதூகலத்துடன் ‘புல்லின்நிறம்நீலம்’ என்று சொல்லிக்கொண்டு குதித்து ஓடியது. புலி தனக்கு தந்த தண்டனையை ஏற்றுக்கொண்டு சிங்கத்திடம் விநயமாக ‘மகாராஜாவே! ஏன் என்னைத் தண்டித்தீர்கள்? புல்லின் நிறம் பச்சை என்பது நீங்கள் அறியாததா?’ எனக்கேட்டது. சிங்கமும் ’நீ சொல்வது சரி. புல்லின் நிறம் பச்சைதான்’ என ஏற்றுக் கொண்டது.

‘அப்படியானால் ஏன் என்னைத் தண்டித்தீர்கள்?’ என ஏமாற்றத்துடன் புலி கேட்டதற்கு சிங்கம் ’இது புல்லின் நிறம் நீலமோ, பச்சையோ என்பது பற்றியதல்ல. இந்தத் தண்டனை உன்னைப்போல் பலமான, புத்திசாலியான ஒருவன் ஒரு கழுதையுடன் நின்று வாக்குவாதப்பட்டது மல்லாமல் அந்த வாதத்துக்கு விடை தேடி கழுதையையும் கூட்டி வந்து எனக்கும் நேரமினக்கேடு தந்ததற்காகத்தான்’ என்று சிங்கம் கூறியது.

உண்மையைப் பற்றியோ, யதார்த்தத்தைப் பற்றியோ அக்கறையில்லாமல், தன்னுடைய கானல் கனவுகளின் நம்பிக்கைகளிலேயே தனது வெற்றிக்கு முனைப்பாயுள்ள ஒரு முட்டாளின் வெறித்தனத்துடன் விவாதம் செய்வதுதான் புத்திசாலித்தனமற்ற நேரவிரயம். பிரயோசனமற்றவற்றிலே நேரத்தைச் செலவழிக்காதே. எவ்வளவு சாட்சியங்களைத் தந்து அறிவுகள் சொன்னாலும் அவற்றை விளங்கிக் கொள்ள முடியாதவர்களும் அவற்றை விளங்கிக் கொண்டாலும் தங்களுடைய அகங்காரம், தற்புகழ்ச்சி, பொறாமை, அழுக்காறு இவற்றால் குருடாகித் தங்களது வாதம் சரியானதல்ல என்று தெரிந்தும் அதுவே வெல்ல வேண்டும் என்று நிற்பவர்கள் உள்ளார்கள். முட்டாள்தனம் உருவெடுத்து கத்தும்போதோ, வீரிடும்போதோ புத்திசாலித்தனமாக வாயை மூடிக்கொள்வது உன்னுடைய நிம்மதிக்கும் எவ்வளவோ பெறுமதியாகும் என்று புலிக்கு புத்தி சொன்னது சிங்கராஜா. நேரத்தை விரயமாக்குகிறோமா என சிங்கராஜா சொன்ன புத்திமதியைத் தொடரும் படலங்களில் இருந்துதான் காண வேண்டும்.

### 760.தொடரும் படலங்களில் என்று கூறும் போது, நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழீ ழத்துக்கான தீர்வை பெற்று விட்டுத் தலை மைப் போட்டியில் இறங்குவோம் என்று குறிப்பிட்டு, வரலாறுகள் சிலவற்றை எடுத்துக்காட்டி, தீர்வுக்கான ஒற்றுமையை வலியுறுத்துகின்றமை நல்ல எதிர்காலத்தை தருகின்றதா?

ஒற்றுமையை ஏற்படுத்தி, ஒருமித்த நிலைப்பாட்டில், தீர்வு பற்றி அல்ல, தமிழரின் நிலை பற்றி முன்னேற வேண்டியது அவசியம். அதை ஊக்குவித்து முன்னெடுப்பது முக்கியம். ஆனால் தமிழ் மக்களின் தலைவர்கள் தேர்தல் என்ற குண்டுச்சட்டியில் நாடாளுமன்றத்துக்குப் போவதை குறிவைத்தே தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசினார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. விக்னேஸ்வரனது இந்த அழைப்பு கூட தேர்தல் அரசியல் தாண்டியதாகப் பார்க்கப்பட்டு, அப்படியான சத்தியம் நிறைந்த நோக்குகளில் முன்னேற வேண்டும். Tamils had enough!

எல்லாவற்றுக்கும் சிங்களவர் ஒற்றுமையாகத் தங்களுக்குள் திருகுதாளங்கள் செய்து, சமஷ்டியைத் தள்ளி, ஒற்றையாட்சியை ஏற்படுத்திக் கொண்டார்கள் எனக் கூறுவது உண்மை. ஆனால் அன்றிருந்த எங்களுடைய தலைவர்களின் புத்திசாலித்தனம் அப்போது அடகு வைக்கப்பட்டிருந்ததா? அருணாசலம், சுந்தரலிங்கம், வைத்திலிங்கம் துரைசாமி, இராமநாதன் எல்லோருமே கொழும்பு மட்டங்களில் இயங்கி, ஒரு இலங்கைத் தேசியத்தை வளர்க்கப் பாடுபட்டவர்கள். மாற்றுச் சிந்தனை எழவில்லை.

பண்டாரநாயக்கா கண்டியர்களுக்காக சமஷ்டி யோசனையை சமர்ப்பணம் வைத்து, அதைத் தமிழ் பகுதிகளுக்கும் கோருமாறு கேட்டபோதும், நமது தமிழ் தலைவர்கள் அப்போது அந்தத் திட்டத்தை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. பின்னர் அருணாசலம் தமிழர் மகா சபையை அமைத்தார்.

சுந்தரலிங்கம் 1956 இல் செல்வநாயகத்தையும் ஏசிப் பேசி தனித் தமிழீழத்தக் கேட்டார். ஆனால் சுந்தரலிங்கத்தின் கருத்துக்கள் அப்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனெனில் ஒற்றுமையாக வாழ்ந்து விடலாம் என்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கை எல்லாம் சரிந்த போதுதான் வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஆதரித்தார்கள். ஆனால் அந்த அத்திபாரத்தில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

கோடிஸ்வரனது வழக்கை சிங்கள மக்கள் பிரிவிக்கவுன்சிலுக்கு (அதி உயர் நீதிமன்றுக்கு) கொண்டு சென்றார்கள் என்று விக்னேஸ்வரன் கூறுகிறார். அரசு தனது நிலைப்பாட்டை நிலை நிறுத்த அப்போது பாடுபட்டது. ஆனால் பிரிவிக் கவுன்ஸில் என்ன செய்தது? வழக்கை திருப்பி அனுப்பி தனிச்சிங்களச் சட்டம் முறையானதா என்பதை (அதாவது ஏ.எல்.டி.கிரெஸ்டரின் தீர்ப்பை) திரும்ப ஆராய பணித்தது. அதனைச் செய்ய அரசு தயங்கியது. தமிழ் மக்களின் தலைவர்கள் அதனை மேற்கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால், அரசின் கபடம் தெரிந்திருந்தும் சம்பள நிலுவையைத் தருகிறோம் என்றதும் மற்ற விடயங்களைக் கைவிட்டு, அதனை ஏற்றுக்கொண்டு 29 ஆம் ஷரத்தின் நீக்கத்துக்கு வழி கோலினார்கள்.

தங்களின் போக்கை நிதர்சனப்படுத்திய சிங்களத் தலைவர்களின் சாணக்கியமா அன்றில் தமிழ் மக்களது தலைவர்களான மேதாவி சட்டத்தரணிகளின் அசிரத்தையா? அல்லது இயலாத்தனங்களா? எது காரணம் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

ஆகவே சொல்லப்படுவது போல் தங்களைத் தாங்கள் விமர்சித்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் முட்டுக்கட்டைகளை முன் வைத்துக்கொண்டு, அதே போக்கில் தமிழ்மக்கள் தொடர்வது அவர்களுக்கு அழிவையே தரும். தங்கள், தங்கள் பிறப்புக் குணாதிசயங்களைச் சற்றுத் தள்ளி வைத்து, தமிழ் மக்களின் நன்மைக்காக ஒத்துழைத்துப் பாடுபட வேண்டும்.

சோல்பரியைப் பற்றி அடிக்கடி பேசும் போது, சுந்தரலிங்கம் அவருடன் ஆரம்பத்திலிருந்து நடத்திய கடிதப் போக்குவரத்தும், அவற்றுக்கு சோல்பரியின் பதில்களும் நினைவுக்கு வருகின்றன. அதனை சுந்தரலிங்கம் ‘ஈழம் ஒரு விடுதலையின் தொடக்கங்கள்’ என்ற பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். அதில் செல்வநாயகத்துடன் முரண்பட்டு ’’சிங்களம் படிக்க கூடாது என்று அறிவுறுத்துவது முட்டாள்தனமான அரசியல். நீயும் நானும் பண்டாரநாயக்காவும் இராமநாதனும் அருணாசலமும் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் ஆங்கிலம் படித்து முன்னேறவில்லையா? நாகநாதனின் மகள் சிங்களம் படித்து வெளிவிவகார பகுதியில் உயர்ந்த அதிகாரியாக வரவில்லையா? ‘சிறைச்சாலை பூஞ்சோலை’, ‘துப்பாக்கிக் குண்டு விளையாடும் பந்து’, ‘தூக்கு மேடை பஞ்சு மெத்தை’, ‘குண்டாந்தடி முருங்கை தடி’ என்றெல்லாம் பேசிக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்து எதனைக் காணப் போகிறாய்? ஈழம் ஒன்றுதான் வழி. அதைக்கண்களைத் திறந்து பார்!” என்றார். செல்வநாயகம் ஏற்றாரா? அன்றைய அரசியல் நிலையில் எதை நோக்கிப் போய் இருக்க வேண்டும்? அவை முடிந்துவிட்டன.

இன்றைய அரசியல் நிலையில் எதை நோக்கிப் போக வேண்டும் என்று தீர்க்கமான பார்வை தமிழ் மக்களுக்கு வர வேண்டும். அது முக்கியம். இவற்றையெல்லாம் வரலாறுகளாகக் குறித்துக் கொண்டே போகலாம். ஆயின், இந்தத் தொடருக்கு முடிவு தந்து, அவற்றின் அனுபவங்களில் மக்கள் தங்களது எதிர்காலத்தை கையில் எடுக்க வேண்டும் என எண்ணுகிறேன்.

பலர் அடுத்த தேர்தலில் மக்கள் தெரிவு செய்வார்கள் என எண்ணுகிறார்கள். இது தேர்தலுக்கு தேர்தல் புதிய தலைவர்களின் – கட்சிகளின் – தேர்வல்ல. வாழ்வுக்கான – தீர்ப்புக்கான – முடிவு. அதற்கான ஒரு முறையான கட்டமைப்பு அரசியல் தலைவர்களையும் உள்ளடக்கி உடனடியாக உருவாக வேண்டும். அதைத்தான் நான் அறிவுறுத்த விரும்புவேன்.

இந்த தொடருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பலரை நான் குறிப்பிட வேண்டும். ஆனால் எல்லோரையும் பெயரிடுவதானால் அது நீண்டதாகிவிடும். அதனால் விட்டுவிடுகிறேன். எங்கள் நட்பில் அதனை அவர்கள் புரிந்து கொள்வார்கள். எனினும் நான் இப்படி எழுதுவதற்கு உறுதுணையாக இருந்து, என்னை ஆசானாக வழிநடத்திய முருகபூபதி பற்றிக் குறிப்பிடாமல் விடமுடியாது. அவர் எனது கருத்தாக்கங்களில் குறுக்கிடாமல் எனது எழுத்தை ஊக்கப்படுத்தினார். சீர்படுத்தினார். அவரது ஊக்கமின்றி பேனாவை எடுக்கவே நான் யோசித்து இருப்பேன்.

அடுத்தது எனது ஆராய்வுகளுக்கு உறுதுணையாக இருந்த நிர்மலா ஜோஸப். தனது நேரகாலம் என்றில்லாமல் சர்வதேச சட்டங்களை ஆய்வு செய்து அவற்றை கோவை படுத்தியதில் அவர் பங்கு அதிகம். அது மட்டுமில்லாமல் அவரது பார்வையும் முக்கியமானது.

அடுத்ததாக ஒரு எழுத்தாளனின் மனைவியின் நிலைதான் எனது வீட்டிலும். என்னை அப்படி என் மனைவி பார்த்ததில்லை. அதனை ஏற்றுதுமில்லை. அதனால்தான் பேசுவதைத் தவிர எழுதுவதும் இல்லை. நான் எழுதியவற்றில் பத்து வீதத்தைக் கூடப் படித்து இருப்பாளோ தெரியாது; ஆனால் காரியாலயத்தில் இருந்து வந்து எழுதத்தொடங்கி நடுநிசியானாலும் விழித்திருந்து, எனது மூப்புக் காரணமாக ஏதும் நடந்து விடுமோ என அஞ்சி என்னோடு இருந்து, எலிப்புழுக்கை காய்ந்தவளையும் நன்றியோடு, அதைக் கேட்க கூடியவளாக இருக்கும்போதும் சொல்லி வைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஏதோ ஒப்புக்கான முகஸ்துதி அல்ல, ஆத்மார்த்தமான உள்ளத்தில் இருந்து வருபவை என புரிந்து கொள்வது மகிழ்ச்சி.

வாசகர்கள் பலர். கருத்துக்கள் தந்த எல்லோரையும் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

(முற்றும்)

காலைக்கதிர் Kalaikkathir

# 367 பொருள்களுக்கு இறக்குமதித் தடை!

அத்தியாவசியமற்ற 367 பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில்இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

பால், பாலாடை, வெண்ணெய், பேரீச்சம்பழம், அன்னாசிப்பழம், மாம்பழங்கள் அப்பிள், திராட்சை உள்ளிட்ட பழவகைகள், தானியங்கள், சொக்கலேட்டுகள், பழச்சாறுகள், நீர் போத்தல்கள், ஒரு சில பியர்கள், ஒரு சில வைன்கள், சிகரெட்டுகள், வாசனைத் திரவங்கள், சவரத்திற்கு முன்னரும் பின்னரும் பயன்படுத்தும் பொருள்கள், சோப்கள், மெழுகுவர்த்திகள், டயர்கள், அழிப்பான்கள், பயண பெட்டிகள், தோல் பொருள்கள், கார்பட்டுகள், ஆடைகளுக்கான டைகள் மற்றும் 'போ'க்கள், திரைச்சீலைகள், கட்டில் விரிப்புகள், விளையாட்டு காலணிகள், தொப்பி வகைகள், தலை பட்டிகள், குடைகள், கூந்தல், போலி சிகைகள்,

செரமிக் பாத்திரங்கள், கண்ணாடி பாத்திரங்கள், குக்கர்கள், அடுப்புகள், மேசைகள், சிங் மற்றும் கைகழுவும் பேசின்கள், கரண்டிகள், மணிகள், மின் விசிறிகள், வாயுச் சீராக்கிகள், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், வக்கும் க்ளீனர்கள், கிறைண்டர்கள், சவர சாதனங்கள், மின்சார மேசை விளக்குகள், நீர் சேமிப்பு கூடாக்கிகள், நிலையான தொலைபேசிகள், வானொலி ஒலிபரப்பு சாதனங்கள், கணனி திரைகள், மூக்குக் கண்ணாடி உள்ளிட்ட கண்ணாடி வகைகள்,

கைக்கடிகாரங்கள், சுவர் கடிகாரங்கள், இசைக் கருவிகள், வாகன இருக்கைகள், மின் விளக்கு தொகுதிகள், (முச்சக்கர வண்டி உள்ளிட்ட சக்கரங்கள் கொண்ட) விளையாட்டு வாகனங்கள, பொம்மைகள், வீடியோ கேம்கள், சீப்புகள் மற்றும் கூந்தலுக்கான கிளிப்புகள் உள்ளிட் அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே இத்தகைய பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுதாகவும், அதற்காக சிறப்பு அனுமதி பெற வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

முதலாவது நடைமுறைக்கமைய, சில தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருள்களுக்கு வரி அறவிடப்படும்.

இரண்டாவது நடைமுறைக்கமைய, தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிப் பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது நடைமுறைக்கமைய சில தெரிவு செய்யப்பட்ட பொருள்களுக்கு வரி விதிக்கவும் அனுமதி பெறுவதைக் கட்டாயமாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.வீதிகள் இருளில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணம் நகரின் அனைத்துப் பகுதியிலும் உள்ள வீதி விளக்குகள் ஆளுநரின் உத்தரவின் பெயரில் யாழ்ப்பாண மாநகர சபையால் துண்டிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

நாட்டின் ஆட்சியாளர்களின் திட்டமிடாத செயல்பாட்டினால் நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரிப்பு ஏற்படுவதோடு தொழில் இன்மையும் அதிகரிக்கும் நிலமையில் களவும் கொள்ளையும் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளுக்கான மின்விநியோகத்தை மாநகர சபை ஊழியர்கள் துண்டிக்கின்றனர்.

"ஆளுநர் உத்தரவிட்டதன் பெயரில் எமக்கு முதல்வரும் ஆணையாளரும் பணித்தனர். அதனை நாம் நிறைவேற்றுகின்றோம்" ஊழியர்கள் தெரிவித்தனர்.

மின் விளக்குகளின் இணைப்புகளை ஊழியர்கள் துண்டித்துச் சென்றபோது வீதியில் நின்ற மக்கள் ஆட்சியாளர்களைப் பகிரங்கமாகவே திட்டித் தீர்ப்பதனைக் காண முடிந்தது.

# யாழ் நகரில் உணவகங்கள் இழுத்து மூடப்படுகின்றன!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 10

நாட்டில் நிலவும் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஐம்பது வீதமான உணவகங்கள் நேற்று இழுத்து மூடப்பட்டன.

யாழ். நகரின் காங்கேசன்துறை வீதியில் இயங்கும் 10ற்கும் மேற்பட்ட உணவகங்களில் 5 உணவகங்கள் நேற்று இழுத்து மூடப்பட்டுள்ளன. இவ்வாறு உணவகங்கள் திடீரென மூடப்பட்டதனால் நகரில் திறந்திருந்த கடைகளில் நெருக்கடி நிலமை காணப்பட்டது.

ரகுமான் உணவக உரிமையாளரான அலாவுதீனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

நாள் ஒன்றிற்கு 500ற்கும் மேற்பட்டவர்களிற்கு உணவும் மேலும் 500 பேருக்கு சிற்றுண்டி வக விற்பனையும் இடம்பெறும் எமது உணவகத்தில் என்னுடன் 11 பணியாளர்கள் பணி யாற்றுகின்றனர். இதில் 8 பேர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். எரிவாயு இன்மையால் உணவகத்தை மூடி உள்ளோம் எப்போது எரிவாயு வரும், எப்போது திறக்கலாம் என்பது தெரியாது. அதனால் பணியாளர்களை ஊருக்கும் அனுப்பவும் முடியவில்லை.

இவை அனைத்தையும் விட துன்பமான நிகழ்வு, தங்கி நிற்கும் 10 பேருக்கும் தேநீர் ஊற்றக்கூட எரிவாயு இல்லை. ஒரு மின்சார கேற்றிலை வாங்கினோம். எமக்கான உணவை ஒவ்வொரு கடை கடையாக அலைந்து வேண்டி வருகின்றோம். பணம் இருந்தாலும் பொருள் இல்லை என்கின்ற அவலத்தை தற்போது தான் சந்திக்கின்றோம். – என்றார்.

## ஐ.நாவில் இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டு முயற்சியாலேயே இந்த வெற்றி கிடைத்தது என்றும் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் கருத்து வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இரண்டு தடவைகள் உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஐந்து விடயங்களை மையப்படுத்தியதாகவே எனது உரை அமைந்தது.

ஐரோப்பாவில் தற்போது கடும் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது, இந் நிலையில், எதற்கு இலங்கை மீது கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது? இலங்கையை இலக்கு வைத்து ஏன் நிதி ஒதுக்கப்படுகின்றது? வருடாந்தம் அறிக்கைகள் ஏன் முன்வைக்கப்படுகின் றன? என்று நான் கேள்விகளை எழுப்பினேன்.

பிற நாடுகளில் சம்பவங்கள் இடம் பெறவில்லையா? எனவே, ஒவ்வொரு நாடுகள் தொடர்பிலும் அறிக்கைகள் வந்தால் அது எங்கு சென்று நிற்கும்?

இலங்கையின் உள்ளக விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தலையிட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினேன். அது இலங்கையின் அரசமைப்பு மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அதிகார எல்லைக்கு முரணான விடயமாகும் என்பதையும் தெளிவுபடுத்தினேன் – என்றார்.

## உக்ரைனிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

15 மாணவர்கள் உட்பட உக்ரைனில் 81 இலங்கையர்கள் இருந்தனர். மாணவர்கள் தவிர அங்கு வசித்த 66 இலங்கையர்களில் 39 பேர் உக்ரைனில் இருந்து வெளியேறியுள்ளனர். போலந்து, ருமேனியா, ஜேர்மன் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அதற்கான அனைத்து வசதிகளையும் எமது தூதரகம் செய்து கொடுத்துள்ளது.

தற்போது உக்ரைனில் 27 இலங்கையர்கள்தான் இருக்கின்றனர். அவர்கள் உக்ரைனில் இருந்து வெளியேற முடியாது எனத் தூதரகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அவர்களில் சிலர் தொழில் செய்கின்றனர். மேலும், சிலர் குடும்பமாக வாழ்கின்றனர் – என்றார்.

## இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரையான காலப்பகுதியில் 2 மணி நேர மின்வெட்டும், மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணிநேர மின்வெட்டும் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, A, B, C, D, E, F, G, H, I, J, K, L ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியில் இரண்டரை மணி நேர மின்வெட்டும், மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியில் ஒன்றரை மணி நேர மின்வெட்டும் அமுல்படுத்தப்படவுள்ளது எனஆணைக்குழு அறிவித்துள்ளது.

## கோட்டாபய தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் 15 யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதில் சர்வகட்சி மாநாடு தொடர்பான யோசனையும் ஒன்று.

நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு சர்வகட்சி மாநாட்டை உடனடியாக நடத்துமாறு ஜனாதிபதியிடம் அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்பிரகாரமே சர்வகட்சிக் கூட்டத்தை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

## என்னதாசன் ஆட்ட

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிரணியால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எங்களுக்கும் பதிலடி கொடுக்கத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகம் மீது முட்டை வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர்களின் வீடுகளைச் சுற்றி வளைப்பதற்கு ஹிருணிகா அழைப்பு விடுத்திருந்தார். அதனால்தான் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்துக்கே சிறிய கூட்டமொன்றை அனுப்பிவைத்தோம்.

எதிரணியால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எங்களுக்கும் பதிலடி கொடுக்க முடியும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எதிரணி என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் ஆட்சியை ஒருபோதும் கைப்பற்றவே முடியாது – என்றார்.

## அரச எம்.பிக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் பங்கேற்றாலும், விமல் வீரவன்ஸவின் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான அறுவர் பங்கேற்கவில்லை. உதய கம்மன்பிலவும் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தார்.

## ராஜீவ் காந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், தற்காலிக விடுப்பில் இருந்தாலும் தனக்கு வெளியே செல்ல முடியாத காரணத்தால் பிணை வழங்குமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

பேரறிவாளனின், உடல் நிலை மற்றும் கல்வித் தகுதியைக் கருத்தில் கொண்டு இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் விளக்கமளித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் அமர்வு ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வாய்மூல அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

மார்ச் 03 ஆம் திகதி மீண்டும் நடைபெற்ற அமர்வில் இலங்கை பற்றியதான எழுத்து மூலமான அறிக்கையை அவர் சமர்ப்பித்த போதிலும், அதற்கு எந்த வொரு பதிலும் அளிக்காமல் பொறுப்பற்ற முறையில் இலங்கை அரசு நடந்தது என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த அமர்வில் பங்கேற்ற உறுப்பு நாடுகளும் தங்களின் முன்னேற்றகரமான கருத்துக்களை தமது தரப்பிலிருந்து முன்வைத்தன.

இதன்படி இந்தியா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற பல நாடுகள் முன்னேற்றகரமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தன – என்றார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# அமைச்சர்களின் அடிமைகளாக மாறினர் சில பௌத்த பிக்குகள்!

## ஓமல்பே சோபித தேரர் சீற்றம்



சில பௌத்த பிக்குகள் அமைச்சர்களின் அடிமைகளாக மாறியுள்ளனர் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். சில பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளால், ஒட்டுமொத்த பௌத்த பிக்குகளுக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசனத்துக்கு ஏற்பட்டுள்ள அழிவிற்கு சில மாநாயக்க தேரர்களும் பொறுப்பு சொல்ல வேண்டுமென அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள பௌத்த மத ஆலோசனை சபை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சபையின் உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகமே நிர்ணயம் செய்கின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆலோசனை சபையால் பௌத்த மதத்துக்கு எந்தவொரு சேவையும் ஆற்றப்படவில்லை என ஓமல்பே சோபித தேரர் இதன் போது குற்றம் சுமத்தியுள்ளார்.

# சமையல் எரிவாயுவுக்கும் பாரிய தட்டுப்பாடு வரலாம்

நாட்டில் பாரியளவில் சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு எரிவாயு கப்பல்களுக்கு 85 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியிருப்பதாக லாப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், மத்திய வங்கி இந்தக் கொடுப்பனவுக்கான டொலர்களை இதுவரையில் வழங்கவில்லை என நிறுவனம் தெரிவித்துள்ளது.

டொலர் பற்றாக்குறையால் நாட்டில் ஒரு லாப் எரிவாயு சிலிண்டரையேனும் கொள்வனவு செய்ய முடியாத அபாய நிலை உருவாகியுள்ளது என எச்சரிக்கை விடுத்துள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மட்டுமன்றி வீடுகளில் சமையல் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

# வெளிநாட்டு நாணயம் மாற்ற இலங்கையில் அதிரடித் தடை!

## மத்தியவங்கி அறிவிப்பு

வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்வது அல்லது மாற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின்றி வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்வது அல்லது மாற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு அங்கீகரிக்கப்படாத பணம் மாற்றுபவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால், மத்திய வங்கியின் பரிவர்த்தனை திணைக்களத்திடம் முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, 011 2398827, 011 2477375 அல்லது 011 2398568 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு இலங்கை மத்திய வங்கி பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது

# எதிர்வரும் இரு வாரங்களில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!

## எச்சரிக்கை விடுப்பு

எதிர்வரும் 2 வாரங்களில் நாடளாவிய ரீதியில் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச துறையில் மாத்திரமன்றி தனியார் துறையிலும் இந்த நிலை ஏற்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்க்கான மருந்துகள் குறைவடைந்துள்ளன என அரச ஔடதவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

கடன்சான்றுப்பத்திர விடுவிப்பு, திறைசேரியால் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஔடத தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதேநேரம், டொலர் பிரச்சினை காரணமாகத் தனியார் துறையிலும் ஔடத தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசஊழியர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தம்!

## அமைச்சரவையில் முடிவு

அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்படுவது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு செவ்வாய்க்கிழமை வெளியிட்டது.

அமைச்சின் செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 225 லீற்றருக்கு மேலதிகமாக விசேட கடமைகளுக்காக வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார். அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகத் தற்காலிகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசேட கடமை எரிபொருள் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளன. தொலைதூர பிரதேசங்களுக்கான கலந்துரையாடல்களை சூம் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பண்டோரா ஆவணம் தொடர்பான விசாரணைக்கு என்ன ஆனது?

## அநுர கேள்வி



பண்டோரா ஆவணத்தில் அம்பலப்படுத்தப்பட்ட பண மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய நிலை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

இரகசிய கொடுக்கல், வாங்கல் அடங்கிய பட்டியலில் இலங்கையின் முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் ஆகியோரது பெயர்களும் வெளியாகியிருந்தன.

இதனை அடுத்து விசாரணை நடத்தி ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் மேற்படி விசாரணை அறிக்கை கடந்த வருடம் நவம்பர் மாதம் அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இலஞ்ச ஊழல் பற்றிய ஆணைக்குழு என்ன நடவடிக்கை எடுத்தது என அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் பண்டோரா ஆவணங்களில் அம்பலப்படுத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான தனது நிலைப்பாட்டை அரசாங்கம் விரைவில் நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# நீதிமன்ற அவமதிப்பு இரண்டாம் வழக்கு மன்றுக்கு அழைத்து வரப்பட்டார் ரஞ்சன்!

நீதிமன்றத்தை அவமதித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இரண்டாவது குற்றச்சாட்டுக்காக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று (புதன்கிழமை) உயர்நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

முன்னைய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்த போது, நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார் என்றவகையில் ரஞ்சன் ராமநாயக்கவின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதில் முதல் குற்றச்சாட்டுக்காக அவருக்கு கடந்த ஜனவரி மாதத்தில் 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கைகள் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

# ஜனாதிபதி கோட்டாவின் மாமி 89 ஆவது வயதில் காலமானார்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மாமியார் காலமாகியுள்ளார்.

முதல் பெண்மணி அயோமா ராஜபக்ஷவின் தாயார் பத்மா தேவி பீரிஸ், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வசித்து வந்த நிலையில் காலமானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்மா தேவி பீரிஸ் இறக்கும் போது அவருக்கு வயது 89 ஆகும். இந்நிலையில், அயோமா ராஜபக்ஷ விரைவில் அமெரிக்கா செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.03.2022இல் வெளியிடப்பெற்றது.